# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8075862

C

04/AC/2021/TVL

1. District : மாவட்டம் Thiruvallur PS: காவல்நிலையம் V & AC, Thiruvallur Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 25.03.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act-1988 (as Amendment in 2018) Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 23.03.2021 at Date to : நாள் வரை 23.03.2021 at
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 08.30 hrs Time to : நேரம் வரை 04.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.03.2021 Time நேரம் : 09.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.03.2021 Time நேரம் : 09.00 hrs
25.03.2021 09.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North East - About 50 Kms.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Kavaraippettai Police station, Thiruvallur Dist.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Jayadeesan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Kattaiyan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 41/2021 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Building contractor (g) Address : முகவரி No. 366, Teachers Colony, Kavarappettai, Gummidipoondi Taluk, Thiruvallur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Sivaraj,
Sub-Inspector of Police,
Kavaraippettai Police station, Thiruvallur Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Discreet enquiry conducted.

Seen. [signature] 25/3/21

[signature] 25/3/21

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

*Deemand bribe amount Rs. 20,000/-*

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது,

இன்று 25.03.2021 -ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் G. கார்த்திக், காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்த போது, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி தாலுகா, கவரைப்பேட்டை, டீச்சர்ஸ் காலனி, எண்: 366, திரு. K. ஜெகதீசன் ஆ/வ 41, த/பெ காட்டையன் என்பவர் ஆஜராகி என்னிடம் கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு:-

*Separate sheets attached.*

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed *G. KARTHIK* Rank *Inspr. of Police* to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

*K. ஜெகதீசன்*
*25-3-2021*

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுத்தவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

*(signature) Insp.*
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
*25.03.2021 at 12.10 hrs.*

Name: பெயர் *G. KARTHIK,*
Rank: நிலை .................... No எண் ....................
*Inspector of Police,*
*V&AC, Thiruvallur.*

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.04/AC/2021/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

அனுப்புநர், K.ஜெகதீசன், ஆ/வ.41, த/பெ.காட்டையன், எண்.366, டீச்சர்ஸ் காலனி, கவரைப்பேட்டை, கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, திருவள்ளூர் மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு பெண் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளனர். நான் கவரைப்பேட்டையில் ஜெ.ஜெ.பில்டர்ஸ் என்ற கட்டுமான நிறுவனம் நடத்திவருகிறேன். கும்மிடிப்பூண்டி வட்டம், பெருவாயில் கிராமத்தில் வசிப்பவரும், வனத்துறையில் பணிபுரிபவருமான திருமதி.காந்திமதி, த/பெ.ராமச்சந்திரன் என்பவர் நிலத்தில் வீடு கட்ட காண்ட்ராக்ட் அக்ரிமெண்ட் போட்டுக்கொண்டு வீட்டினை கட்ட ஆரம்பித்து தற்போது முழுமைபெறும் நிலையில் உள்ளது. அக்ரிமெண்டில் குறிப்பிட்ட வீட்டின் அளவைவிட அதிகமான அளவில் வீட்டினை கட்டித்தர திருமதி.காந்திமதி அவர்கள் கோரியதன்பேரில் நானும் அவ்வாறு கட்டினேன். அவ்வாறு கட்டப்பட்ட வீட்டிற்கு அதிகப்படியாக செலவு ஆன தொகையை தருவதாக கூறிய திருமதி.காந்திமதி அவர்கள், தற்போது தராததால் என்னால் அவர்கள் கூறிய தேதியில் வீட்டினை கட்டிமுடிக்க முடியாமல் உள்ளது. இது சம்மந்தமாக திருமதி.காந்திமதியின் தந்தை திரு.ராமச்சந்திரன் அவர்கள் என்மீது கவரைப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அப்புகாரின் மீது விசாரணை செய்த கவரைப்பேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.சிவராஜ் அவர்கள் கடந்த 27.01.2021-ஆம் தேதி என்னையும் திரு.ராமச்சந்திரன் அவர்களையும் நேரில் அழைத்து விசாரித்தார். பின்னர் 08.02.2021 ஆம் தேதிக்குள் மேற்படி வீட்டின் வேலையை முடித்து சாவியை தருகிறேன் என்று ஒப்புக்கொண்டதாக காவல் நிலையத்திலேயே ஒப்புதல் கடிதம் எழுதி என்னை மிரட்டி கையொப்பம் பெற்றுக்கொண்டும், திரு.ராமச்சந்திரன் அவர்களிடம், மேற்படி புகாரின் மீது நடவடிக்கை தேவையில்லை எனவும் எழுதிவாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டார். அன்றுமுதல் கவரைப்பேட்டை காவல் நிலைய சார்பு-ஆய்வாளர் திரு.சிவராஜ் அவர்கள் என்னை அவ்வப்போது கைப்பேசியில் தொடர்பு கொண்டு என்மீது கொடுத்த புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க லஞ்சமாக பணம் ரூ.25,000/- கொடுக்கவேண்டும், இல்லையென்றால் அப்புகார் மனு மீது நடவடிக்கை எடுத்து என்மீது FIR போட்டு ஜெயிலுக்கு அனுப்பிவிடுவேன் என்று மிரட்டிவருகிறார். கடந்த 23.03.2021 ஆம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு கவரைப்பேட்டை காவல் நிலைய சார்பு-ஆய்வாளர்

**(FIR contents, continues to next page.....)**

25/03/2021

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.04/AC/2021/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

திரு.சிவராஜ் அவர்கள் எனது கைப்பேசிக்கு தொடர்பு கொண்டு என்னை கவரைப்பேட்டை காவல் நிலையத்திற்கு ரூ.25,000/- கொண்டுவருமாறு கூறினார். நான் அன்று காலை சுமார் 08.30 மணிக்கு கவரைப்பேட்டை காவல் நிலையம் சென்று சார்பு ஆய்வாளர் திரு.சிவராஜ் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் நான் கேட்ட பணம் ரூ.25,000/- கொண்டு வந்துள்ளாயா என்று கேட்டார் நான் ரூ.25,000/- பணம் என்னிடம் இல்லை என்று கூறினேன். அதற்கு திரு.சிவராஜ் அவர்கள் பணம் கொடுக்கவில்லை என்றால் உன்மீது FIR போட்டு ஜெயிலுக்கு அனுப்பிவிடுவேன் என்று மிரட்டி அன்று மாலை என்னை வந்து பணத்துடன் சந்திக்குமாறு கூறி அனுப்பிவிட்டார். மாலை சுமார் 04.30 மணிக்கு மீண்டும் கவரைப்பேட்டை காவல் நிலையம் சென்று சார்பு ஆய்வாளர் திரு.சிவராஜ் அவர்களை சந்தித்து என்னால் அவ்வளவு தொகை தயார் செய்ய இயலவில்லை என்று எனது இயலாமையை கூறினேன். அதற்கு திரு.சிவராஜ் அவர்கள் ரூ.5,000/- குறைத்துக்கொண்டு ரூ.20,000/- கொடுத்தால்தான் உன் மீது FIR போடாமல் இருப்பேன் இல்லையெனில் உன் மீது FIR போட்டு ஜெயிலுக்கு அனுப்பிவிடுவேன் என்று மிரட்டி அனுப்பிவிட்டார். நான் கவரைப்பேட்டை காவல்நிலையத்திலிருந்து வந்துவிட்டேன். பின்னர் அன்று மாலை சுமார் 06.00 மணிக்கு மீண்டும் எனது கைப்பேசியில் தொடர்பு கொண்டு நான் கேட்ட பணம் தயார் செய்துவிட்டாயா. நான் கேட்ட பணம் ரூ.20,000/- கொடுக்காவிட்டால் உன் மீது FIR போட்டு ஜெயிலுக்கு அனுப்பிவிடுவேன் என்று மீண்டும் மிரட்டினார். மேற்படி கவரைப்பேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.சிவராஜ் அவர்கள் என்னிடம் கேட்ட ரூ.20,000/-ஐ லஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லாததாலும். மேலும் எனக்கு எழுதப்படிக்க தெரியாததால் என்னுடைய நண்பர் திரு.ருக்கேஷ் என்பவரிடம் நான் சொல்ல சொல்ல அவர் எழுதி முடித்து, பின் படித்துக்காட்டினார். நான் கூறியவாறு சரியாக இருந்தது. நான் கையொப்பம் செய்து இப்புகார் மனுவினை இன்று 25.03.2021 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகம் வந்து கவரைப்பேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.சிவராஜ் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூபாய்.20,000/- உடன் இப்புகார் மனுவினை அளிக்கிறேன். எனவே என்னிடம் ரூ.20,000/- லஞ்சம் கேட்ட கவரைப்பேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.சிவராஜ் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்படி புகார் மனுவினை நானும் எனது நண்பர் P.ருக்கேஷ் என்பவருடன் நிலையம் வந்து சமர்ப்பிக்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு தக்க ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம் K.ஜெகதீசன்) 25/03/2021.

**(FIR contents, continues to next page.....)**

25/03/2021

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.04/AC/2021/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

Honoured Madam, I received the above complaint on 25.03.2021 at 09.00 hrs and after getting proper permission from DVAC on this complaint, enquiry conducted in a discreet manner. Based on the outcome of the Discreet enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Sivaraj, Sub-Inspector of Police, Kavaraippettai Police Station, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.04/AC/2021/TVL, u/s 7 of The Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018) on 25.03.2021 at 09.45 hrs. The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Thiruvallur. Copies send to Officers concerned and took-up the investigation.

25/03/2021

INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.